بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 09, May 2014 (Tamil)**

## இறைகடமையை நிறைவேற்றினால்தான் பொதுத் தொண்டுக்கு மதிப்பு இருக்க முடியும் !

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

**'எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு'** என்ற முழக்கத்தை நாம் குறிப்பாக மற்றவர்களுக்கு முன் எடுத்துரைக்கின்றோம். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் அல்லது அதன் உறுப்பினர்கள் மற்றவர்களிடம் பகைமை கொள்கின்றது அல்லது வெறுப்பு கொள்கின்றது என்ற கருத்துக்கு மறுப்பாக அல்லது அந்த தவறான எண்ணத்தை நீக்குவதற்காக நாம் இந்த முழக்கத்தை இடுகின்றோம். அல்லது இஸ்லாம் அன்பு, நேசம், நல்ல முறையில் நடந்து கொள்ளுதல் மற்றவர்களின் உணர்வுகளை கவனத்தில் கொள்ளுதல் ஆகியவற்றிற்கான போதனையை வழங்குகிறது; எனவே இஸ்லாம் அநீதி, வன்முறையின் மார்க்கம் என்பதே தவறு என்ற ஓசையை உயர்த்துவதற்காக நாம் இந்த முழக்கத்தை இடுகின்றோம். மேலும் நாங்கள் ஒருவருக்கொருவர் வெறுப்புகள் எனும் சுவர்களை உடைத்தெறிந்து விட்டு அன்பு, நேசத்துடன் வாழ்கின்றோம்; வாழ விரும்புகிறோம் என்ற முழக்கத்தை நாம் இடுகின்றோம்.

எனவே நாம் மனித குலத்திற்கு ஏதாவதொரு தொண்டு செய்கின்றோம் என்றால், நாம் இஸ்லாத்தை தப்லீக் செய்கின்றோம் என்றால், அதுவும் நாம் உலகத்தின் ஒவ்வொரு மனிதனையும் நாம் நேசிக்கின்றோம். நாம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலிருந்தும் வெறுப்புகளின் விதையை களைந்து விட்டு அன்பு, நேசம் ஆகியவற்றின் செடியை நாட்ட விரும்புகிறோம் என்ற காரணத்தினால்தான். இவையெல்லாம் ஏன் செய்கின்றோம்? ஏனெனில் இவற்றை நமக்கு நமது எஜமானரும், பின்பற்றத் தகுந்தவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் நமக்குக் கற்றுத் தந்துள்ளார்கள். இவற்றை எல்லாம் நாம் செய்வதற்குக் காரணம், **நாம் நமது எஜமானர் (ஸல்) அவர்களை இரவுகளில் உலகின் அனுதாபம் மற்றும் நேசத்தில் துடித்தவாறு கண்டுள்ளோம்.** எந்த அளவுக்கு அவர்கள் துடித்தார்கள், நிம்மதியிழந்தார்கள், சஜ்தாவில் அழுதார்கள் என்றால், அந்த துடிப்பை அல்லாஹ் திருக்குர்ஆனில் பதிவு செய்து, மறுமை வரை தோன்றும் மனிதர்களுக்கு - வெறுப்பு, பொறாமை ஆகியவற்றிலிருந்து தூயவர்களாக இருக்கும் மனிதர்களுக்கு - சான்றாக பதிவு செய்து விட்டான். இனி வரக் கூடியவர்கள் அன்னார் (ஸல்) மீது ஆட்சேபணை செய்வதற்கு முன் அந்த துடிப்பைப் பற்றி சிந்திப்பதற்காகவும், அன்னாரைச் சார்ந்திருக்கும் முஸ்லிம்கள் என அழைக்கப்படுபவர்கள் அந்த அழகிய முன்மாதிரியின்படி நடப்பதற்கு முயற்சி செய்பவர்களாக ஆக வேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு செய்தான்.

அல்லாஹ் கூறினான்: **'ஃபலஅல்லக பாகிவுன் நஃப்ஸக அலா ஆஸாரிஹிம் அன்ல் லம் யுஃமினூ பிஹாஸல் ஹதீஸி அஸஃபா. இவர்கள் ஏன் நம்பிக்கை கொள்வதில்லை என்ற கடுமையான கவலையின் காரணத்தினால் நீர் உம்மையே மாய்த்துக் கொள்வீரா என்ன? (18:7)**

எவர்களைப் பற்றி இங்கு கூறப்பட்டிருகிறதோ அவர்கள் எவற்றின் மீது நம்பிக்கை கொள்ளாமல் இருந்தனர்? அவர்கள் நம்பிக்கை கொள்ளாமல் இருந்தது, இறைவனுக்கு இணைவைக்காதீர்கள் எனக் கூறப்பட்டபோது, அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. இறைவனுக்கு மகன் உண்டு எனக் கூறாதீர்கள்; இணைவைப்பது எப்படிப்பட்ட பாவம் என்றால் அல்லாஹ் அது பற்றி நான் அதனை மன்னிக்க மாட்டேன் என்று கூறுகிறான். அதைக் கூறும்போது

அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. ஆக, இதுதான் ஒவ்வொரு மனிதனிடமும் கொள்ளும் அனுதாபம் மற்றும் அன்பு ஆகும். எதுவரை என்றால், இணைவைப்பவரை நேரான வழியில் கொண்டு வருவதற்காக செயல் அளவிலான முயற்சி செய்கின்ற அதே நேரத்தில் அவருக்காக துஆவும் செய்ய வேண்டும். எனவே அஹ்மதிகளுக்கு **'எல்லாரிடத்தும் அன்பு'**என்பது பற்றி சரியான ஞானம் கிடைக்க வேண்டுமென்றால், நாம் நமது எஜமானரும், மனிதத்துவத்திற்கு அருள்புரிந்தவருமாகிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிமுறையை கற்றுக் கொள்ள வேண்டும். நாம் நமது ஓரிறை கொள்கையையும் அளந்து பார்க்கும்போதுதான் அந்த வழிமுறையை கற்றுக் கொள்ளவும் முடியும்.

பிறகு அன்பு, அனுதாபத்தின் இன்னோர் உதாரணத்தையும் நாம் பார்க்கின்றோம். சமுதாயத்தின் சார்பாக அநீதியும், கொடுமையும் அதன் எல்லையை அடைந்து விட்டபோதும் **அன்னார் (ஸல்) எதிரிகளின் அழிவுக்காக துஆ செய்யவில்லை.** மாறாக, அல்லாஹ்வே! எனது சமுதாயத்திற்கு நேர்வழி காட்டுவாயாக; நான் கூறுவது அவர்களின் பயனுக்காகத்தான் என்பதை இவர்கள் அறிவதில்லை என துஆ செய்தார்கள். இன்னொரு கோத்திரத்தினர் மிகவும் தொல்லைகள் கொடுத்தனர். முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, அவர்களின் அழிவுக்காக துஆ செய்யுமாறு கூறினர். அப்போதும் ஹஸ்ரத் நபி (ஸல்) கையேந்தியவாறு துஆ செய்ய ஆரம்பித்தார்கள். அழிவுக்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பத் துஆ செய்து விட்டார்கள்; இனி அந்த கோத்திரத்தார் அழிந்து விடுவார்கள் என முஸ்லிம்கள் கருதினர். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், **அல்லாஹ்வே! தவ்ஸ் கோத்திரத்தாருக்கு நேர்வழி காட்டுவாயாக** என துஆ செய்தார்கள்.

எனவே அன்பு என்பது நம்முடையவர்களுக்காக மட்டுமல்ல; அனுதாபம் என்பது நம்முடையவர்களுக்காக மட்டுமல்ல. மாறாக மற்றவர்களிடம் காட்டும் அன்பிற்கும் அனுதாபத்திற்கும் அதே படித்தரம்தான். ஓர் இறை கொள்கை நிலைபெற வேண்டும் என்ற ஒரே வேதனைதான் இருக்கிறது! அதனால் உலகம் அழிவிலிருந்து தப்பிக்க வேண்டும் என்ற ஒரே வேதனைதான் இருக்கிறது!! இன்றும் உலகில் ஆயிரக்கணக்கான இணைவைத்தல் பரவி விட்டது. இணைவைத்தல் மட்டுமின்றி உலகின் பெரும் பகுதி இறை இருப்பையே மறுத்து விட்டது. எனவே இறைவனின் ஆட்சியை நிலைநாட்டுவதற்காக - ஓர் இறை கொள்கையை நிலைநாட்டுவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது முன்மாதிரியின் மூலமாக நமக்குத் தந்த பாடத்தை நாமும் கடைபிடிக்க வேண்டியது வரும். **நாம் (எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு என்ற) ஒரு முழக்கமிடுகின்றோம்; அதை உலகம் விரும்புகிறது; பல்வேறு இடங்களில் நமக்கு ஆகா, ஆகா என்ற பாராட்டு கிடைக்கிறது என்பதில் மட்டும் நாம் மகிழ்ச்சி அடைந்து விடக் கூடாது.** எத்தகைய பரந்த நோக்கத்தைப் பெறுவதற்காக மனிதனின் படைப்பு உருவானதோ அதனைப் பெறுவதற்கான ஒரு வழிமுறையாக இந்த முழக்கம் இருக்கிறது என்பதை நாம் எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். எனவே நமது மனித குல தொண்டு என்பது அன்பைப் பரப்புவதும், அதனை வெளிப்படுத்துவதும், அதன்படி செயல்படுவதும், வெறுப்பிலிருந்து விலகியிருப்பதும் ஆகும். வெறுப்பிலிருந்து விலகியிருப்பது மட்டுமல்லாது வெறுப்பை வெறுப்பதுமாகும். அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்காக அவனுடைய ஓரிறைமையை நிலைநாட்டுவதற்காக நாம் வெறுப்பை வெறுக்கின்றோம். நாம் வெறுக்கின்றோம் என்றால், எந்தவொரு தனி மனிதரிடமும் வெறுப்பு இல்லை. மாறாக, ஷைத்தானிய செயலில் வெறுப்பு இருக்கிறது; அது இருக்கவும் வேண்டும். எனவே நாம் உலகத்தின் பிடித்தமானவர்களாக ஆகுவதற்காக மட்டும் நாம் முழக்கமிடக் கூடாது; அல்லது அதை வெளிப்படுத்தக் கூடாது. மாறாக நமது நோக்கத்தைப் பெறுவதற்காகவும் முழக்கமிடுங்கள். இறையன்பைப் பெறுவதற்காகவும் படைப்பினங்களுக்கு தொண்டு செய்வதற்காகவும் அன்பின் கோட்பாடுகளை கடைபிடித்து நடப்பதற்காகவும் அல்லாஹ் இக்காலத்தில் தேர்ந்தெடுத்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட நற்பேறு பெற்றவர்களாவோம். அன்னார் (அலை) நமக்கு அத்தகைய கோட்பாடுகளையும் போதனைகளையும் வழங்கியிருக்கிறார்கள். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''மார்க்கத்தின் முழுமையான பகுதிகள் இரண்டுதான். **ஒன்று,** இறைவனை நேசித்தல்; **இன்னொன்று**னொன்று மனித குலத்தின் துன்பத்தை தனது துன்பமாகக் கருதி அவர்களுக்காக துஆ செய்யும் அளவுக்கு அவர்களை நேசித்தல்.''

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** மனித குல தொண்டிற்காக நிறுவப்பட்டுள்ள **'மனிதம் முதலில்'** என்ற நமது நிறுவனத்தில் தொண்டு செய்பவர்களுக்கும் அதன் அமைப்பிற்கும் மார்க்கத்தை விட்டு முற்றிலும் தனியாகி விட வேண்டும் என்றும் ,தனியாகி தொண்டு செய்தால் ஒருவேளை நமக்கு உலகத்தில் நல்ல வரவேற்பு கிடைக்கும் என்றும் சிந்தனை தோன்றியதாக கொஞ்ச நாட்களாக நான் உணர்கிறேன். அப்போது நான் மேலிட அமைப்பாளர்களிடம், நீங்கள் மார்க்கத்துடன் இணைந்திருப்பதனால்தான் உங்களுக்கு முக்கியத்துவம் இருக்கிறது; ஜமாஅத்தின் பெயர் எங்கேயாவது வருகிறது எனக் கூறினேன். எனவே தேவைக்கேற்றபடி, எங்கேயாவது ஜமாஅத்தின் பெயரை பயன்படுத்த வேண்டியது வந்தால் பயன்படுத்துவதில் எந்தக் குற்றமும் இல்லை. நாம் இறைவனை மகிழ்விப்பதற்காக தொண்டு செய்ய வேண்டும் என்பது நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். அடியார்களின் உரிமைகளை நிறைவேற்றுங்கள் என்பது அல்லாஹ்வின் கட்டளையாகும். எனவே நாம் மனித குலத் தொண்டு செய்ய வேண்டும். மேலும் அல்லாஹ்வை மகிழ்விப்பதற்காக அல்லாஹ்விடமுள்ள தொடர்பை பாதுகாப்பதும், நமது இறைவணக்கங்களை பாதுகாப்பதும் தேவையானதாகும். அது இல்லாமல் மனித குலத் தொண்டிற்கும் எந்த பயனுமில்லை.

இவர்களுக்கு இந்த விஷயம் புரிந்து விட்டது. ஆனால் மற்ற நாடுகளில் உள்ள **'Humanity First' (மனிதம் முதலில்)** என்ற துறையின் கிளைகள் அதன் பணியாளர்கள், அமைப்புகள் - அதில் இல்லா மாஷா அல்லாஹ் (அல்லாஹ் நாடியதைத் தவிர) ஏறக்குறைய அனைவரும் அஹ்மதிகள்தான். அவர்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், நீங்கள் அல்லாஹ்வுடன் உள்ள தொடர்பை உறுதிப்படுத்தும் போதும், உங்கள் பணிகளை அல்லாஹ்வின் அருளை தேடித்தரக் கூடியதாக ஆக்கும்போதும், உங்கள் பணிகளை துஆக்களுடன் துவக்கும்போதும்தான் அதில் அருள் இருக்கும். அது இல்லாமல் நமது எந்த பணியிலும் அருள் இருக்க முடியாது. நமது அறிவினால் என்ன திட்டங்களை தீட்டிக் கொண்டிருந்தாலும் சரியே! இன்று நான் இது பற்றி பேச வேண்டும் என நினைத்திருந்தேன். அது அவசியம் என நினைத்தேன் எனவே கூறுகிறேன்.

இப்போது நான் கூறி வந்த **'எல்லாரிடத்தும் அன்பு'**என்ற விஷயத்தின் பக்கம் வருகிறேன். நான் விளக்க விரும்புவது என்னவெனில், படைப்பின தொண்டு, படைப்பினங்களுடன் அநுதாபம் காட்டுதல், அன்பைப் பரப்புவது, பகைமையை முடிவுக்குக் கொண்டு வருவது ஆகிய இந்த நன்மையெல்லாம் சந்தேகமின்றி மிகப் பெரிய நன்மைகளாகும். ஆனால் இந்த முழக்கம் மட்டுமே நமது வாழ்க்கையின் **motto** (குறிக்கோள்) எனப் புரிந்து கொள்ளக் கூடாது. நாம் இதைச் செய்து விட்டால் எல்லாவற்றையும் பெற்று விட்டோம் என நாம் கருதி விடக் கூடாது. நான் முன்னரே கூறியது போன்று இந்த முழக்கம் அந்த குறிக்கோளைப் பெறுவதற்கான ஒரு பகுதியாகும். மேலும் எந்த படித்தரத்தைப் பெறுவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றினார்களோ அதன் பக்கம் முன்னேறிச் செல்வதற்கான ஓர் அடியாகும். அன்னாரின் அடிமைத்தனத்தில் அதனைப் பெறுவதற்காக இந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிகப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அல்லாஹ் அனுப்பினான். அந்த நோக்கம் அல்லாஹ்வின் ஓர் இறைமையைப் பற்றிய சரியான ஞானத்தை உருவாக்குவதாகும்; அல்லாஹ்வின் எல்லா கட்டளைகளின்படியும் செயல்படுவதற்கு முயற்சி செய்தல் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை நமது நோக்கமாகவும் குறிக்கோளாகவும் கொள்ளுதல். மேலும் அதனைப் பெறுவதற்காக இயன்ற அளவுக்கு முழுமையாக முயற்சி செய்தல். ஏனெனில் இதன் மூலமாகவே எல்லா விதமான உயரிய ஒழுக்கங்களையும் நன்மைகளையும் பெறுவதை சாத்தியமாக ஆக்க முடியும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** எப்படி இருந்தாலும் எவரும் தமக்காக ஒரு நல்ல முழக்கத்தை நியமிக்கிறார் என்றால், அது அவருக்கு நன்மைதான். சில முழக்கங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாக இருகின்றன. உதாரணமாக, இறைவனுக்கு கட்டுப்படுங்கள். மற்றும் நன்மைகளில் முந்திக் கொள்ளுங்கள். இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாகும். ஏனெனில் **இறைவனுக்குக் கட்டுப்படாமல் நன்மைகளைப் பெறுவது சாத்தியமில்லை.** அவ்வாறே**எவர் நல்லவராக இல்லையோ அவர் இறைவனுக்குக் கட்டுப்பட்டவராக இருக்க முடியாது.** அவ்வாறே நான் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவேன் என்ற முழக்கமும், நன்மைகளில் முந்திக் கொள்ள முயற்சி செய்வேன் என்பதும் ஆகிய இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று ஒத்தவையாகும். இரண்டும் ஒன்றுக்குள் ஒன்று வந்து

விடுகின்றன. எனவே எல்லா நன்மைகளும் நல்லவைதான். நாம் அவற்றை மேற்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். ஆனால் முழக்கத்தைப் பற்றிய கேள்வி எழும்போது அதன் பக்கம் கவனம் இருந்து அதன் பக்கமே சிலர் தனது கவனத்தை முற்றிலும் எல்லைக்குட்பட்டதாக்கி விடுகின்றனர். தனது நன்மைகளையே எல்லாம் எனக் கருதத் தலைப்பட்டு விடுகின்றனர். உதாரணமாக நமது இளைஞர்கள் அல்லது சில மக்கள் தமது மார்க்க நிலைமைகளை மறந்து விட்டனர். ஆனால் உலகத்திற்குக் காட்டுவதற்காக **'எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு'** என்ற முழக்கத்தை மிகவும் அதிகமாக இட ஆரம்பித்து விட்டனர். இஸ்லாத்தின் கொள்கையை நல்ல எண்ணத்துடன் பரப்ப வேண்டுமென்றால் இந்த முழக்கம் மிகச் சிறந்ததுதான். ஆனால் இது மட்டுமே நமது **motto** (குறிக்கோள்) அல்ல. நான் விளக்கியது போன்று, நமது குறிக்கோள் மிகப் பரந்ததாகும். அவ்வாறே படைப்பினங்களுக்கு அனுதாபம் காட்ட வேண்டுமென்றால், வெறும் படைப்பினங்களுக்கு அனுதாபம் காட்டுவது மட்டும் ஒன்றுமே அல்ல. அல்லாஹ்வின் நினைவு உள்ளத்தில் மறைந்து கொண்டிருக்கிறதென்றால் பிறகு அதற்கும் எந்த பயனுமில்லை.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் எழுதியிருக்கிறார்கள்:**

''நான் இந்த கட்டுரையைப் படித்தபோது எனக்கு யூதருடைய ஒரு சம்பவம் நினைவுக்கு வந்தது. அந்த யூதர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது பேச்சுக்கிடையில், எங்களுக்கு (முஸ்லிகளாகிய) உங்கள் மீது மிகவும் பொறாமை ஏற்படுகிறது எனக் கூறினார். அதற்கு உமர் (ரலி) அவர்கள், ஏன் பொறாமை ஏற்படுகிறது? அதற்கு என்ன காரணம்? எனக் கேட்டார்கள். அப்போது யூதர், எந்த விஷயத்தில் எங்களுக்கு பொறாமை என்றால், இஸ்லாத்தில் ஒரு தனித்தன்மை வாய்ந்த ஒரு சிறப்பு இருக்கிறது. அதாவது **இஸ்லாத்தின் போதனைகளில் இல்லாத - திருக்குர்ஆனில் இல்லாத - உலகத்தின் எந்தவொரு விஷயமும் இல்லை. தனிப்பட்ட வகையிலிருந்து ஐக்கிய நாட்டு வகை வரையிலான எல்லா கட்டளைகளும் பிரச்சனைகளும் அதற்கான தீர்வுகளும் இஸ்லாத்தில் இருக்கிறது.** இது எங்களிடம் பொறாமையை ஏற்படுத்துகிறது எனக் கூறினார்.''

எனவே நாம் இந்த விஷயத்தை முன்னால் வைப்போமென்றால், இஸ்லாத்தின் ஏதாவது ஒரு விஷயத்தை குறிக்கோளாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வது சரியல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே நன்மைகளில் ஒருவரையொருவர் முந்திக் கொள்ளுங்கள் என்பது ஒரு சிறந்த குறிக்கோள் என்பதில் ஐயமில்லை. அவ்வாறே நான் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவேன் என்பதும் மிகச் சிறந்த குறிக்கோள் ஆகும். திருக்குர்ஆனிலும் இதன் பக்கம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. **'பல் துஃஃஸிரூனல் ஹயாதத்துன்யா வல் ஆகிரது கைருன்வ் வஅப்கா** என வந்துள்ளது. அதாவது அறிவிலிகள் மார்க்கத்தை விட உலகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர்; ஆனால் மறுமை அதாவது மார்க்க வாழ்வின் விளைவு உலக வாழ்வின் விளைவை விட மிக உயர்ந்ததும் நீடித்ததுமாகும்.(87:17 காண்க). பெரும்பாலும் நாம் ஜுமுஆவிலும் இந்த வசனத்தை ஓதுகின்றோம். மேலும் இது அல்லாமல் மேலும் எண்ணற்ற போதனையை திருக்குர்ஆன் நமக்கு வழங்கியுள்ளது. எனவே குறிக்கோளாகக் கொள்ளத்தகாத வேறு என்ன போதனை திருக்குர்ஆனில் உள்ளது? அந்த போதனையை நோக்கினால் - அது பற்றி சிந்தித்தால் அது உள்ளத்தை தன் பக்கம் ஈர்க்கின்றது.

இந்த முன்னுரைக்குப் பிறகு **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறினார்கள்:**

''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய காலம் கரையும் கடலும் குழம்பிப் போயிருந்த காலமாக இருந்தது. அந்த காலத்தில் உருவாகாத எந்தவொரு தீமையும் இருந்ததில்லை. **ஹஸ்ரத் வாக்களிப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிழல் ஆவார்கள். எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தின் நிழல் ஆகும்.** இன்றும் எல்லாவிதமான தீமைகள் தனது முழுமையை எட்டியுள்ளதை நாம் காண்கிறோம். எனவே இன்று மார்க்கத்தின் தேவையும் இருக்கிறது. நல்லொழுக்கத்தின் அனைத்து வகையான தேவையும் இருக்கிறது. உலகத்தின் அனைத்து நன்மைகளின் தேவையும் முன்னேற்றங்களின் தேவையும் இருக்கிறது. மக்களின் மனங்களிலிருந்து இறைநம்பிக்கை மறைந்து விட்டதைப் போன்று உயர்ந்த ஒழுக்கங்களும் மறைந்து விட்டன. மேலும் உண்மையான உலக முன்னேற்றமும் அழிந்து விட்டது. ஏனெனில் இந்த காலத்தில் மக்கள் எதனை முன்னேற்றம் எனக் கூறுகிறார்களோ அது சுய நலத்தின்

தோற்றமாகும் - அது சொந்தமானதாக இருந்தாலும் சரி, அல்லது ஐக்கிய நாட்டு அளவில் பார்த்தாலும் சரி. ஏனெனில் தற்போது மக்கள் எதனை முன்னேற்றம் எனக் கூறுகிறார்களோ அது தனக்கு மட்டும் பயனுள்ளதாகும். அதை உலக முன்னேற்றம் எனக் கூற முடியாது. ஏனெனில் அதன் மூலமாக உலகத்தின் ஒரு பிரிவினர் பயனடைந்து கொண்டிருக்கின்றனர்; மற்றவர்கள் அடிமையாக்கப்படுகின்றனர் - அது அரசியல் அடிமையாக இருந்தாலும் சரி; அல்லது சமூக அடிமையாக அல்லது பொருளாதார அடிமையாக இருந்தாலும் சரி. ஏதாவதொரு வகையில் ஒரு பகுதி அடிமையாகிக் கொண்டிருக்கிறது. அது எந்நிலையிலும் அவர்களுக்கு முன்னேற்றம் அல்ல. மேலும் எவர்கள் முன்னேற்றம் அடைகின்றார்களோ அவர்களுக்கும் தமது பயன்கள்தான் நோக்கமாகும். சுயநலமாகும்; அதற்கே அவர்கள் முன்னேற்றம் என்று பெயரிடுகின்றனர்.

எனவே அப்படிப்பட்ட நேரத்தில், ‘இந்த வசனத்தை குறிக்கோளாகக் கொள்ளுங்கள்; அதனை விட்டு விடுங்கள்’ எனக் கூறுவது தவறாகும். மாறாக, திருக்குர்ஆனின் ஒவ்வொரு வசனமும் நமது குறிக்கோளாகவும் கோட்பாடாகவும் இருக்கிறது; இருக்கவும் வேண்டும். எனவே நமது குறிக்கோள் முழுக் குர்ஆனாக இருக்கிறது. ஆனால் இன்னொரு குறிக்கோளின் தேவை இருக்கிறதென்றால் அதனையும் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக நியமித்துள்ளான். அது, **லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்** என்பதாகும். இது முழுக் குர்ஆனின் சுருக்கமாகும். எல்லா போதனைகளும், எல்லா உயரிய குறிக்கோள்களும் ஓர் இறை கொள்கையுடனேயே தொடர்புடையவையாக இருக்கின்றன. அவ்வாறே அடியார்களின் ஒருவருக்கொருவருடனான தொடர்பு மற்றும் அடியாருக்கு அல்லாஹ்வுடனான தொடர்பு ஆகியவையும் ஓர் இறை கொள்கையில் வந்து விடுகின்றன.

அவ்வாறே இன்னும் பல விஷயங்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தன்னை மாய்த்துக் கொண்டவாறு அன்னார் (ஸல்) அவர்களிடமிருந்து ஒளியைப் பெற்று நமக்கு எடுத்துச் சொன்னார்கள். மேலும் ஷிர்க்கிலிருந்து நம்மை விலக்கினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்தான் இந்தக் காலத்து மக்களுக்கு **‘லா இலாஹ இல்லல்லாஹ்’** என்பதன் தோற்றத்தை வெளிப்படுத்திக் காட்டினார்கள். இதுவே இஸ்லாத்தின் இரத்தினச் சுருக்கமாகும். அது முழுமையான ஓரிறையை கொண்ட அனைவரிடமும் காணப்பட வேண்டியது அவசியமானதாகும். மற்றவை அனைத்தும் விளக்கங்களாகும். அவை பல்வேறு நபர்களுக்கு பல்வேறு வடிவங்களில் மாறுபட்டுக் கொண்டிருக்கிறது. உதாரணமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருவருக்கு **பெற்றோருக்குப் பணிவிடை செய்வதைமிகப் பெரும் நன்மையாகக்** கூறினார்கள். இன்னொருவருக்கு **அல்லாஹ்வின் வழியில் போரிடுவதை** மிகப் பெரும் நன்மையாகக் கூறினார்கள். வேறொருவருக்கு **தஹஜ்ஜுது தொழுகையை** நிறைவேற்றுவதை மிகப் பெரும் நன்மையாகக் கூறினார்கள். எனவே ஒவ்வொருவருக்கும் அடிப்படையான பலவீனத்தை நீக்குவதற்காக கவனமூட்டினார்கள். ஆனால் அதற்காக மற்ற நன்மைகளை நிறைவேற்றத் தேவையில்லை என்பது இதன் பொருள் அல்ல.

திருக்குர்ஆனின் அனைத்து கட்டளைகளும் தத்தமது இடத்தில் மிகவும் அருமையானவையும், பயனுள்ளவையுமாகும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். ஆனால் **‘லா இலாஹ இல்லல்லாஹ்’** என்பது எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது. எனவே இதுதான் அசல் குறிக்கோளாகும். இதனை நாம் எல்லா நேரமும் முன்னால் வைக்க வேண்டிய தேவை இருக்கிறது. ஓர் இறைமை என்பதன் உண்மை நிலையையும் அதனை நிலைநாட்டுவதையும் பற்றி சிந்திக்க வேண்டும். ஓர் இறைமை என்பது மனிதன் சிலையை வணங்காதிருப்பதோ, அல்லது ஒரு மனிதனை இறைவனுக்கு இணையாக, உயிருள்ளவராக கருதாதிருப்பதோ அல்லது ஒருவரை இறைவனுக்கு இணையாக்காதிருப்பதோ மட்டுமல்ல. மாறாக, உலகத்தின் ஒவ்வொரு வேலையிலும் ஓர் இறைமைக்கு தொடர்பு இருக்கிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தூங்கச் செல்லும்போதும், ஒளூ செய்யும்போதும் ஓர் இறைமையைக் கூறி வந்தார்கள். ஒரு மனிதருக்கு உலகத்தின் ஏதாவதொரு வேலையில் நம்பிக்கை அல்லது அதை சார்ந்திருத்தல் ஏற்பட்டு விட்டால் அந்த மனிதர் ஷிர்க்கின் இடத்தில் சென்று நின்று விட்டார். பிறகு அவர் ஓர் இறை கொள்கையுடையவர் என்ற வாதம் அபத்தமானதாகி விடுகின்றது. ஏனெனில் மனிதன் இறைவனை மட்டுமே சார்ந்திருத்தல், இறைவன் மீது மட்டுமே நம்பிக்கை வைத்தல் என்பது ஓர் இறைமையின் கட்டாய நிபந்தனையாகும். ஓர் இறைமை என்பதன் கருத்தே ஒவ்வொரு வேலையிலும் - அது மார்க்கம் சார்ந்ததாக இருந்தாலும் - உலகம் சார்ந்ததாக இருந்தாலும் மனிதனின் பார்வை ஒரே இறைவனின் பக்கம் திரும்ப வேண்டும் என்பதாகும்.

எனவே சந்தேகமின்றி அனைத்து நல்ல சொற்றொடர்களும் தத்தமது இடத்தில் அருமையான சிறந்த கோட்பாடுகள்தான். ஆனால் மனிதன் முழுமையான ஓர் இறை கொள்கை கொண்டவராக

ஆகுவதற்கு அவருடைய பார்வையிலிருந்து எல்லாம் மறைந்து விடுவதும் அல்லாஹ்வைத் தவிர அவருக்கு எதுவும் ஒன்றுமற்றதாக ஆகிவிடுவதும் அவசியமானதாகும். எனவே உண்மையான கோட்பாடு **'லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்'** என்பதாகும். அதில் எல்லா நன்மைகளும் ஒன்று சேர்ந்து விடுகின்றன. மேலும் ஓர் இறை கொள்கையை புரிவதில் என்ன கஷ்டங்கள் இருக்கின்றனவோ அதற்கான தீர்வையும் நமக்கு இதுவே தருகின்றது. கஷ்டங்களை நீக்குவதற்கு ஒரு முன்மாதிரி இருக்க வேண்டும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பற்றி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், ஒரே சொற்றொடரில், **'கான குலுகுஹுல் குர்ஆன்'** (அவர்களின் நல்லொழுக்கம் திருக்குர்ஆனாகவே இருந்தது) எனக் கூறி விட்டார்கள். இந்த ஒரு சொற்றொடரில் ஓர் இறை கொள்கையின் உயர்ந்த தகுதியும் விளக்கப்பட்டு விட்டது. திருக்குர்ஆனுடைய கட்டளைகளின் உயர்ந்த முன்மாதிரியின் தகுதியும் நிலைபெற்று விட்டது. மேலும் கட்டளைகளின் விபரங்களும் முன்னால் வந்து விட்டது.

எனவே **எவர் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் புரிந்து விட்டாரோ அவர் இறைவனைப் புரிந்து விட்டார்; மேலும் எவர் இறைவனைப் புரிந்து விட்டாரோ அவர் எல்லாவற்றையும் புரிந்து விட்டார்.** ஏனெனில் இறைவனுக்கு இணைவைத்தல்தான் எல்லா தீமைகளின், கவனக் குறைவுகளின், பாவங்களின் ஆணி வேராகும். மேலும் ஓர் இறை கொள்கையில் நிலை பெற்ற பிறகு மனிதனிடம் உயர்ந்த நல்லொழுக்கம், அறிவு, இறைஞானம், நகரிகம், அரசியல், பிற திறமைகளில் புலமை ஆகிய அனைத்தும் வந்து விடுகிறது. ஏனெனில் அல்லாஹ்வின் ஒளி ஒரு மருந்தாகும். அதில் எல்லா நோய்களுக்கும் மருத்துவம் இருக்கிறது. எனவே அல்லாஹ்வே நமக்காக நியமித்துள்ள கோட்பாடு **'லா இலாஹ இல்லல்லாஹ்'** என்பதாகும். மற்றவையெல்லாம் விளக்கங்களாகும். அவை அறிவுரையாக பயன்படலாம். மேலும் இந்தக் காலத்தில் **தஜ்ஜால்** தனது எல்லா ஆற்றல்களுடனும் உலகில் வெளிப்பட்டிருகின்றான். அவனுடைய **நோக்கம்,** நான் மார்க்கத்தை விட உலகத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பேன் என்பதாகும். எனவே இதற்கு எதிராக நாங்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்போம் என்று முழக்கமிடுவது **நமது கடமையாகும்.** எனவேதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பைஅத்தின் நிபந்தனைகளில் இந்த சொற்றொடரையும் சேர்த்துள்ளார்கள். அதன் பொருள், நாம் மார்க்கத்தின் போதனையை கடைபிடித்து வருவோம்; மேலும் ஒவ்வொரு எதிரியின் ஆட்சேபணைகளுக்கு எதிராக இஸ்லாத்தின் அழகிய முகத்தை வெளிப்படுத்திக் காட்டுவோம். இவையெல்லாம் நாம் **'லாஇலாஹ இல்லல்லாஹ்'** என்பதை உலகத்தில் நிலைநாட்டுபவர்களாக நாம் ஆக வேண்டும் என்பதற்காகத்தான். இந்த நோக்கத்தைப் பெறுவதற்காகத்தான் நாம் இந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருக்கின்றோம்.**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறையறிவிப்பாக இவ்வாறு கூறினார்கள்:**

**'குஸித் தவ்ஹீதத் தவ்ஹீத யா அப்னாஅல் ஃபார்ஸ்'** அதாவது பாரஸீக மக்களே! ஓர் இறை கொள்கையை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். பாரஸீக மக்கள் என்பது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குடும்பத்தினர் என்பது மட்டுமல்ல. மாறாக, ஜமாஅத் உறுப்பினர்கள் அனைவரும் ஆன்மீகமான முறையில் பாரஸீக மக்கள் என்பதன் கீழ் வருகின்றார்கள். இந்தக் கட்டளை முழு ஜமாஅத்திற்கும் ஆகும். துன்பத்தின்போது மனிதன் குறிப்பிட்ட ஒன்றை பற்றிப் பிடிக்கின்றான் என்பது பொதுவான ஒரு விதியாகும். நீங்கள் துன்பங்களின்போது ஓர் இறை கொள்கையை பற்றிப் பிடியுங்கள்; அதில் மற்றெல்லா விஷயங்களும் வந்து விடுகின்றன என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

எனவே நமது ஜமாஅத் **'லா இலாஹ இல்லல்லாஹ்'** என்ற கோட்பாட்டை எல்லா நேரமும் நமக்கு முன்னால் வைக்க வேண்டியது கடமையாகும். இணைவைத்தல் என்பதுடன் நாத்திகமும் மிக விரைவாக பரவிக்கொண்டிருக்கும் இன்று, நாம் நம்மை ஒரே முழக்கத்தில் எல்லைக்குட்பட்டதாக ஆக்கிக் கொண்டு - அதனை போதுமானதாகக் கொண்டு நாம் நமது உலகையும் மறுமையையும் நன்றாக்கிக் கொள்ள முடியாது. மனித குலத் தொண்டு என்ற சிந்தனையில் நாம் நமது தொழுகைகளையும் இறைவணக்கங்களையும் விடவும் முடியாது. எவர் அவ்வாறு செய்கிறாரோ அல்லது கூறுகிறாரோ அவருக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் எந்தத் தொடர்பும் இல்லை. எனவே நாம் நமது உண்மையான குறிக்கோளையும் நோக்கத்தையும் எப்போதும் முன்னிறுத்த வேண்டும். அப்போதுதான் எல்லா உலக, ஆன்மீக அருள்களையும் பெற முடியும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதன் உண்மையை புரிந்து கொள்ளும் நல்வாய்ப்பை வழங்குவானாக.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian** **Translated By *O.M. Muzzammil Ahmad***